உ
சிவமயம்



யாழ்ப்பாணம் - அராலி மேற்கு

# திருமதி கோபிநாத்சிங் சற்குணநாயகி

அவர்களின்

# நினைவு மலர்

13 - 01 - 1994

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



யாழ்ப்பாணம் - அராலி மேற்கு

# திருமதி கோபிநாத்சிங் சற்குணநாயகி

அவர்களின்

# நினைவு மலர்

உற்றார் ஆருளரோ, உயிர்கொண்டு போம்பொழுது
குற்றா லத்துறை கூத்தனல் லால்நமக்கு
உற்றார் ஆருளரோ?

— திருநாவுக்கரசர்

சிறீமுக வருடம் மார்கழி மாதம் 29 ம் நாள்

13 - 01 - 1994

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமரர்

# திருமதி கோ. சற்குணநாயகி

அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



## திரு பொன்னுத்துரை கோபிநாத்சிங்

அவர்களின்

அன்பு மனைவி

# அமரர் சற்குணநாயகி

அவர்கள்

தோற்றம்;
10 - 04 - 1946

மறைவு:
14 - 12 - 1993

### திதி வெண்பா

ஆண்டு ஸ்ரீமுகவில் அண்டிய கார்த்திகை
பூண்ட பிரதமைப் பூர்வபக்கம் - மாண்புடைய
சற்குண நாயகி சார்ந்தாரே பேரின்பம்
சிற்பரன் சேவடியைச் சேர்ந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# திருமதி கோபிநாத்சிங் சற்குணநாயகி

அவர்களின்

# வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்

நிலைமண்டில ஆசிரியப்பா

திருவளர் இலங்கையின் சிரமென வடபால்
மருவுயாழ்ப் பாண மாநகர் மேற்கில்
கற்றுணர் புலவர் கலைபல வல்லுனர்
நற்றவம் முயல்வோர் ஞானியர் வைத்தியர்
ஈகை யிரக்கம் இன்சொல் லுடையோர்
மேவிய வியன்பதி, வள்ளி யம்மை
ஞாபக வித்தியா சாலை சரஸ்வதி
வித்தியா சாலை மிளிரும் இந்துக்
கல்லூரி முதலிய கலைக்கூ டங்களும்
வண்ணப் புரத்தில் வதிவிசு வேசர்
கண்ணுதற் கற்பக விநாயகக் கடவுள்
பன்னிரு கரத்துப் பகவான் கந்தவேள்
என்னுங் கடவுளர்க் கெடுத்வா லயங்கள்
மன்னிய அராலி வண்பதி மேற்கில்
சால்புடன் விளங்கிய சரவண முத்துவின்
கால்வழித் தனயன் வேலுப் பிள்ளையும்
பூம லட்சுமிப் பொற்புறு மனைவியும்
பெற்றநன் மகளாய்ப் பிறங்கிய புகழுளாள்;
சிதம்பர நாதன் வைத்தியர் துணைவி
இதம்பெறு நல்லார் இரத்தினம் மாவும்
கமலா தேவியின் கணவ ராகிய
கோதில் குணத்துக் குணநா யகமும்
சந்திர சேகரன் தார மாகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேதகு செல்வ நாயகி யம்மையும்
சாலவும் போற்றும் தங்கை யாவார்:
தகவுடை நம்பி சண்முக வடிவேல்
மிகுதியும் போற்றும் மேன்மைசேர் அக்காள்:
உத்தமர் வாழும் உரும்பரா யூரில்
பொற்புற உதித்துப் பலதொழில் புரிந்து
உரும்பராய் ஐக்கிய பண்ட சாலையின்
மனேச்சரா யிருந்த மதிப்புள நம்பி
பொன்னுத் துரையும் சிவனடி பொருந்திய
அன்னம் மாவும் அன்புடன் பெற்ற
நன்மகன் பரமேஸ் வரியின் பெறாமகன்,
இந்துக் கல்லூரியில் இனிதுகற் பிக்கும்
செந்திரு வன்ன சீரா சிரியை
பட்ட தாரி குகனேச மலரும்
காங்கே சன்துறை சீமெந்துக் கூட்டுத்
தாபனக் கணக்காளர் சற்குண நாதனும்
சார்ஜன்டா யிருந்த சரத்சந் திரனும்,
திருமணி மாறன் துணைவியனு ராதாவும்,
கிருபா மனைவி விவேகினி யம்மையும்
செல்வன் செந்தூர்ச் செல்வா வொடுநற்
செல்வி அனித்தா சீரிய தங்கை
தம்பியர் போற்றும் தகவுடை அண்ணன்:
கெக்கி ராவை கஹட்டகஸ் திரிய
மருதங் கடவை மராமத்துப் பகுதி
மேற்பார்வை யாளராய் விளங்கியிந் நாளில்
சுவிற்ச லாந்தில் தொழில்புரிந் துயரும்
குணபாலகன் கோபிநாத் சிங்கின் துணைவி:
அனைவரும் போற்ற அன்புடைக் கணவன்
மனைவி யென்ன மனக்கருத் துணர்வு
வாய்த்த நற்குண மலையெனத் திகழ்ந்தார்;
வட்டுக் கோட்டை வயங்குயாழ்ப் பாணக்
கல்லூரி தன்னிற் கற்கும் கோகுலன்
இந்துக் கல்லூரியில் இணைந்த இராகுலன்
அராலி சரஸ்வதி மகாவித்தி யாலய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவி யாகும் திலகா யினியெனும்
சீரிய மக்களை சிறப்புடன் வளர்த்துப்
பேருற வைத்த பெண்மைப் பெருநிதி
அடிசிற் றினியாள் அருமைக் கணவன்
படிசொல் தவறாப் பண்புடைப் பாவை;
சுற்றம் போற்றும் சுகுணச் சுடர்க்கொடி
பிறந்த இடமும் புகுந்த இடமும்
திறம்பெற விளக்கிய சீரிய நங்கை;
குலதெய்வம் என்னக் கொண்ட வண்ணப்புரம்
விசுவேசர் வழிபாட்டில் மேவிய நெஞ்சினள்;
நோயுற் றடராது நொந்துமனம் வாடாது
பாயிற் படுக்காது பரிதவிப் பெய்தாது
கடவுள் நினைவொடு கணப்பொழு தினிலே
சடுதியில் சரிந்து சகோதரர் மக்கள்
சார்ந்த வேளையில் சஞ்சல மின்றி
மீளாத் துயிலில் ஆழ்ந்து ஸ்ரீமுக
ஆண்டு கார்த்திகை இருபத் தொன்பது
ஆயி ரத்துத் தொழாயிரத் துத்தொண்
ணூற்று மூன்றுபன் னிரண்டு பதினான்
கென்னும் தேதியில் செவ்வாய்க் கிழமை
முற்பகல் ஏழரை மணியிற் பூர்வ
பக்கப் பிரதமைப் பாய்குறு திதியில்
நண்ணிய மூல நட்சத் திரத்தில்
கண்ணுதற் கடவுளை நண்ணினர் நயந்தே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணவர் கவலை

எப்பொழுதும் இனியவராய் எனது கொள்கை
இனிதுணர்ந்து நடப்பவராய்ச் செயலால் சொல்லால்
தப்பெதுவும் இல்லாமல் சரியாய் வாழ்ந்தாய்
தனயரையும் வாழவைத்தாய் தனித்தேன் இன்று
இப்பிறப்பில் நானிருக்கும் வரையும் நீரும்
இருந்திடுவீர் எனநம்பி இருந்தேன் ஐயோ
இப்படியும் வருமென்ன ஒருபோ தேனும்
எண்ணியதும் இல்லையே என்செய் வேனே

தாரமென வாய்த்தெனக்குத் தாதி யாகிச்
சமர்த்தான மந்திரியாய்த் தாயு மாகி
வாரம்மிகப் பூண்டென்னை வாழ வைத்தீர்
வரம்பில்லா அன்பினிலே திளைக்க வைத்தீர்
பாரம்மிக உடையதிந்தக் குடும்பம் பெற்ற
பண்புடைய பிள்ளைகளை உம்மைப் போல
ஆரமுதம் எனவளர்க்கும் ஆற்றல் இல்லேன்
ஆரொடுநொந் துரைத்தழுவேன் அறியேன் அந்தோ

வெளிநாடு சென்றுபொருள் தேடிச் சேர்த்து
விரைந்திங்கு வாருங்கள் மக்கள் தம்மை
எளிதாக நான்வளர்ப்பேன் எதற்கும் நீங்கள்
எந்தவிதக் கவலையுமில் லாது வாழ்ந்து
களிகூர்ந்து சிறந்திடுங்கள் என்ன உள்ளம்
கனிந்துரைத்தீர் சற்குணமே ஏனோ என்மேல்
துளியுமன்பில் லாதவரைப் போல விட்டுத்
தொடரமுடி யாவுலகம் சென்றாய் கண்ணே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்கள் துயரம்

அன்பு நிறைந்த அம்மாவே யாரை
இனியம் மாவென்போம்
துன்பந் தாங்க மாட்டோமே சோர்ந்து
வருந்தி யழுகின்றோம்
என்னே எங்கள் விதியிதுவோ இறைவ
னுடைய சோதனையோ
இன்னும் தாம திக்காமல் இப்போ
தேவத் தருளம்மா.

அம்மா அம்மா எங்களது அரிய
பொன்னே கண்மணியே
இம்மா நிலத்தில் நீங்களன்றி யாரே
உற்ற துணையாவார்
பெம்மான் வண்ணைப் புரத்தீசன் பெரிதும்
கருணை வைத்தெங்கள்
அம்மா வைத்தன் திருவடியில் அடையச்
செய்ய வேண்டுவமே.

## சகோதரர்களின் துக்கம்


எங்களுக்கு மிகவாய்த்த இனியஅன்புச் சோதரியே
தங்கமெனும் குணக்குன்றே தயாவுடைய அருள்நிதியே
இங்குனது மக்கள்படும் இன்னல்கள்பார் மலைமங்கை
பங்கனருட் பாதத்தில் படர்ந்தனையோ சற்குணமே.

உடன்பிறப் பில்லாத உடம்புபா ழென்றனரே
அடம்பினது கொடிதிரண்டால் அனையோமாய் மிடுக்கோ
டிவ்
விடமிருந்தோம் நின்பிரிவால் இடர்மிகுந்தோம் எப்போதும்
திடங்கூறி எமைவீரத் திண்மைபெறச் செய்தனையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேற்றம்

பிறந்தவர்கள் எல்லோரும் இறத்தல் இந்தப்
    பேருலகின் நியதியெனத் தெளிந்து நாங்கள்
அறம்பொருந்தும் சற்குணநா யகியார்க் காக
    அழுதழுது சோருவதால் பயனொன் றில்லை
துறந்திடுவோம் கவலையினை அந்த அம்மை
    தொல்லைதரும் பிறப்பறுக்க அருளும் வண்ணம்
சிறந்தவண்ணப் புரத்துவிசு வேசன் பாதம்
    சேர்ந்திடுவோம் துயர்தீர்வோம் சாந்தி சாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



## விநாயகர் வணக்கம்

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே

## தேவாரம்

ஆறாடு சடைமுடியன் அனலாடும்
மலர்க்கையன் இமயப் பாவை
கூறாடு திருவுருவன் கூத்தாடுங்
குணமுடையோன் குளிருங் கோயில்
சேறாடு செங்கழுநீர்த் தாதாடி
மதுவுண்டு சிவந்த வண்டு
வேறாய வுருவாகிச் செவ்வழிநற்
பண்பாடும் மிழலை யாமே.

அங்கத்தை மண்ணுக்காக்கி
ஆர்வத்தை உனக்கே தந்து
பங்கத்தைப் போகமாற்றிப்
பாவித்தேன் பரமா நின்னைச்
சங்கொத்த மேனிச்செல்வா
சாதல் நாள்நாயேன் உன்னை
எங்குற்றாய் என்ற போதால்
இங்குற்றேன் என்கண்டாயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

### மாணிக்கவாசகசுவாமிகள் அருளிய

# கீர்த்தித் திருவகவல்

திருச்சிற்றம்பலம்

தில்லை மூதூர் ஆடிய திருவடி
பல்லுயி ரெல்லாம் பயின்றன னாகி
எண்ணில் பல்குணம் எழில்பெற விளங்கி
மண்ணும் விண்ணும் வானோ ருலகும்
துன்னிய கல்வி தோற்றியும் அழித்தும்

என்னுடை இருளை யேறத் துரந்தும்
அடியா ருள்ளத் தன்புமீ தூரக்
குடியாக் கொண்ட கொள்கையுஞ் சிறப்பும்
மன்னு மாமலை மகேந்திர மதனிற்
சொன்ன ஆகமம் தோற்றுவித் தருளியும்

கல்லா டத்துக் கலந்தினி தருளி
நல்லா ளோடு நயப்புற வெய்தியும்
பஞ்சப் பள்ளியிற் பான்மொழி தன்னொடும்
எஞ்சா தீண்டும் இன்னருள் விளைத்தும்
கிராத வேடமொடு கிஞ்சுக வாயவள்

விராவு கொங்கை நற்றடம் படிந்தும்
கேவேட ராகிக் கெளிறது படுத்தும்
மாவேட் டாகிய ஆகமம் வாங்கியும்
மற்றவை தம்மை மகேந்தி ரத்திருந்
துற்றவைம் முகங்க ளாற்பணித் தருளியும்

நந்தம் பாடியில் நான்மறை யோனாய்
அந்தமில் ஆரிய னாயமர்ந் தருளியும்
வேறுவே றுருவும் வேறுவே றியற்கையும்
நூறுநூ றாயிரம் இயல்பின தாகி
ஏறுடை ஈசனிப் புவனியை உய்யக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுடை மங்கையும் தானும்வந் தருளிக்
குதிரையைக் கொண்டு குடநா டதன்மிசைச்
சதுர்படச் சாத்தாய்த் தானெழுந் தருளியும்
வேலம் புத்தூர் விட்டே றருளிக்
கோலம் பொலிவு காட்டிய கொள்கையும்

தர்ப்பணம் அதனிற் சாந்தம் புத்தூர்
விற்பொரு வேடற் கீந்த விளைவும்
மொக்கணி யருளிய முழுத்தழல் மேனி
சொக்க தாகக் காட்டிய தொன்மையும்
அரியொடு பிரமற் களவறி யொண்ணான்

நரியைக் குதிரை யாக்கிய நன்மையும்
ஆண்டுகொண் டருள அழகுறு திருவடி
பாண்டி யன்றனக் குப்பரி மாவிற்
றீண்டு கனக மிசையப் பெறாஅ
தாண்டான் எங்கோன் அருள்வழி யிருப்பத்

தூண்டு சோதி தோற்றிய தொன்மையும்
அந்தண னாகி ஆண்டுகொண் டருளி
இந்திர ஞாலங் காட்டிய இயல்பும்
மதுரைப் பெருநன் மாநக ரிருந்து
குதிரைச் சேவக னாகிய கொள்கையும்

ஆங்கது தன்னில் அடியவட் காகப்
பாங்காய் மண்சுமந் தருளிய பரிசும்
உத்தர கோச மங்கையு ளிருந்து
வித்தக வேடங் காட்டிய இயல்பும்
பூவண மதனிற் பொலிந்தினி தருளித்

தூவண மேனி காட்டிய தொன்மையும்
வாத வூரினில் வந்தினி தருளிப்
பாதச் சிலம்பொலி காட்டிய பண்பும்
திருவார் பெருந்துறைச் செல்வ னாகிக்
கருவார் சோதியிற் கரந்த கள்ளமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூவல மதனிற் பொலிந்தினி தருளிப்
பாவ நாசம் ஆக்கிய பரிசும்
தண்ணீர்ப் பந்தர் சயம்பெற வைத்து
நன்னீர்ச் சேவகன் ஆகிய நன்மையும்
விருந்தின னாகி வெண்கா டதனிற்

குருந்தின் கீழன் றிருந்த கொள்கையும்
பட்ட மங்கையிற் பாங்கா யிருந்தங்
கட்டமா சித்தி அருளிய அதுவும்
வேடுவ னாகி வேண்டுருக் கொண்டு
காடது தன்னிற் கரந்த கள்ளமும்

மெய்க்காட் டிட்டு வேண்டுருக் கொண்டு
தக்கா னொருவன் ஆகிய தன்மையும்
ஓரி யூரின் உகந்தினி தருளிப்
பாரிரும் பாலகன் ஆகிய பரிசும்
பாண்டூர் தன்னில் ஈண்ட இருந்தும்

தேவூர் தென்பாற் றிகழ்தரு தீவிற்
கோவார் கோலங் கொண்ட கொள்கையும்
தேனமர் சோலைத் திருவா ரூரில்
ஞானந் தன்னை நல்கிய நன்மையும்
இடைமரு ததனில் ஈண்ட விருந்து

படிமப் பாதம் வைத்தவப் பரிசும்
ஏகம் பத்தி னியல்பா யிருந்து
பாகம் பெண்ணோ டாயின பரிசும்
திருவாஞ் சியத்திற் சீர்பெற இருந்து
மருவார் குழலியொடு மகிழ்ந்த வண்ணமும்

சேவக னாகித் திண்சிலை யேந்திப்
பாவகம் பலபல காட்டிய பரிசும்
கடம்பூர் தன்னில் இடம்பெற இருந்தும்
ஈங்கோய் மலையில் எழிலது காட்டியும்
ஐயா றதனில் சைவ னாகியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துருத்தி தன்னில் அருத்தியோ டிருந்தும்
திருப்பனை யூரில் விருப்ப னாகியும்
கழுமல மதனிற் காட்சி கொடுத்தும்
கழுக்குன் றதனில் வழுக்கா திருந்தும்
புறம்பய மதனில் அறம்பல அருளியும்

குற்றா லத்துக் குறியா யிருந்தும்
அந்தமில் பெருமை அழலுருக் கரந்து
சுந்தர வேடத் தொருமுத லுருவுகொண்
டிந்திர ஞாலம் போலவந் தருளி
எவ்வெவர் தன்மையுந் தன்வயிற் படுத்துத்

தானே யாகிய தயாபர னெம்மிறை
சந்திர தீபத்துச் சாத்திர னாகி
அந்தரத் திழிந்துவந் தழகமர் பாலையுட்
சுந்தரத் தன்மையொடு துதைந்திருந் தருளியும்
மந்திர மாமலை மகேந்திர வெற்பன்

அந்தமில் பெருமை யருளுடை அண்ணல்
எந்தமை யாண்ட பரிசது பகரின்
ஆற்ற லதுவுடை அழகமர் திருவுரு
நீற்றுக் கோடி நிமிர்ந்து காட்டியும்
ஊனந் தன்னை ஒருங்குட னறுக்கும்

ஆனந் தம்மே ஆறா அருளியும்
மாதிற் கூறுடை மாப்பெருங் கருணையன்
நாதப் பெரும்பறை நவின்று கறங்கவும்
அழுக்கடை யாமல் ஆண்டுகொண் டருள்பவன்
கழுக்கடை தன்னைக் கைக்கொண் டருளியும்

மூல மாகிய மும்மல மறுக்கும்
தூய மேனிச் சுடர்விடு சோதி
காதல னாகிக் கழுநீர் மாலை
ஏலுடைத் தாக எழில்பெற அணிந்தும்
அரியொடு பிரமற் களவறி யாதவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிமா வின்மிசைப் பயின்ற வண்ணமும்
மீண்டும் வாரா வழியருள் புரிபவன்
பாண்டி நாடே பழம்பதி யாகவும்
பத்திசெய் அடியரைப் பரம்பரத் துய்ப்பவன்
உத்தர கோச மங்கையூ ராகவும்

ஆதி மூர்த்திகட் கருள்புரிந் தருளிய
தேவ தேவன் திருப்பெய ராகவும்
இருள்கடிந் தருளிய இன்ப வூர்தி
அருளிய பெருமை யருண்மலை யாகவும்
எப்பெருந் தன்மையும் எவ்வெவர் திறமும்

அப்பரி சதனால் ஆண்டுகொண் டருளி
நாயி னேனை நலமலி தில்லையுட்
கோல மார்தரு பொதுவினில் வருகென
ஏல என்னை ஈங்கொழித் தருளி
அன்றுடன் சென்ற அருள்பெறு மடியவர்

ஒன்ற வொன்ற உடன்கலந் தருளியும்
எய்தவந் திலாதார் எரியிற் பாயவும்
மாலது வாகி மயக்க மெய்தியும்
பூதல மதனிற் புரண்டுவீழ்ந் தலறியும்
கால்விசைத் தோடிக் கடல்புக மண்டி

நாத நாத என்றழு தரற்றிப்
பாதம் எய்தினர் பாத மெய்தவும்
பதஞ்சலிக் கருளிய பரமநா டகவென்
றிதஞ்சலிப் பெய்தநின் றேங்கின ரேங்கவும்
எழில்பெறும் இமயத் தியல்புடை யம்பொற்

பொலிதரு புலியூர்ப் பொதுவினில் நடநவில்
கனிதரு செவ்வா யுமையொடு காளிக்
கருளிய திருமுகத் தழகுறு சிறுநகை
இறைவன் ஈண்டிய அடியவ ரோடும்
பொலிதரு புலியூர்ப் புக்கினி தருளினன்

ஒலிதரு கைலை யுயர்கிழ வோனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகம்

வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே எனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளந்தாழ் உறுபுனலிற் கீழ்மே லாகப்
பதைத்துருகும் அவர்நிற்க என்னை யாண்டாய்க்
குள்ளந்தாள் நின்றுச்சி யளவும் நெஞ்சாய்
உருகாதால் உடம்பெல்லாங் கண்ணாய் அண்ணா
வெள்ளந்தான் பாயாதால் நெஞ்சங் கல்லாம்
கண்ணிணையும் மரமாம் தீவினையி னேற்கே.

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த் துன்விரை
யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி
வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசய
போற்றியென்னும்
கைதான் நெகிழ விடேன்உடை யாய்என்னைக்
கண்டுகொள்ளே.

# திருவிசைப்பா

சுருதிவா னவனாம் திருநெடு மாலாஞ்
சுந்தர விசும்பி னிந்திரனாம்
பருதிவா னவனாம் படர்சடை முக்கட்
பகவனாம் அகவுயிர்க் கமுதாம்
எருதுவா கனனாம் எயில்கள்மூன் றெரித்த
ஏறுசே வகனுமாம் பின்னுங்
கருதுவார் கருதும் உருவமாங் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏக நாயகனை இமையவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை எதிரில்
போக நாயகனைப் புயல் வணற்கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேக நாயகனை மிகு திருவீழி
மிழலை விண்ணிழி செழுங்கோயில்
யோக நாயகனை யன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே.

## திருப்பல்லாண்டு

தாதையைத் தாளற வீசிய
சண்டிக்கு மண்டத் தொடுமுடனே
பூதலத் தோரும் வணங்கப் பொற்
கோயிலும் போனகமு மருளிச்
சோதி மணிமுடித் தாமமும்
நாமமும் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்குப் பரிசுவைத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

சீருந் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகில்
ஊரு முலகுங் கழற வுளறி
உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

ஐந்துபே ரறிவுங் கண்களே கொள்ள
வளப்பருங் கரணங்கள் நான்குஞ்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றுந்
திருந்துசாத் துவிகமே யாக
இந்துவாழ் சடையான் ஆடுமா னந்த
வெல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துட் டிளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

கோலமா மஞ்ஞை தன்னிற்
குலவிய குமரன் றன்னைப்
பாலனென் றிருந்தே னந்நாட்
பரிசிவை யுணர்ந்தி லேனியான்
மாலயன் றனக்கு மேனை
வானவர் தமக்கும் யார்க்கு
மூலகா ரணமாய் நின்ற
மூர்த்தியிம் மூர்த்தி யன்றோ.

## திருப்புகழ்

இருவர் மயலோ அமளி விதமோ
எனென செயலே அணுகாத
இருடி அயன்மா வமர ரடியா
ரிசையு மொலிதா இவைகேளா
தொருவ னடியே னலறு மொழிதா
னொருவர் பரிவாய் மொழிவாரோ
உனது பததூள் புவன கிதா
னுனது கிருபா கரமேத்தா
பரம குருவா யணுவி லசைவாய்
பவன முதலா கியபூதப்
படையு முடையாய் சகல வடிவாய்
பழைய வடிவா கியவேலா
அரியு மயனோ டபய மெனவே
அயிலை யிருள்மேல் விடுவோனே
அடிமை கொடுநோய் பொடிகள் படவே
அருண கிரிவாழ் பெருமானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தரலங்காரம்

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப்
பாதங்கள் மெய்ம்மைகுன்றா
மொழிக்குத் துணை முருகாவெனு
நாமங்கள் முன்பு செய்த
பழிக்குத் துணை யவன் பன்னிரு
தோளும் பயந்ததனி
வழிக்குத் துணை வடிவேலுஞ்
செங்கோடன் மயூரமுமே.

## கந்தரனுபூதி

உருவா யருவா யுளதா யிலதாய்
மருவாய் மலராய் மணியா யொளியாக்
கருவா யுயிராய்க் கதியாய் விதியாக்
குருவாய் வருவா யருள்வாய் குகனே.

## பட்டினத்தார் பாடல்

ஐயிரண்டு திங்களா வங்கமெலா நொந்துபெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச் — செய்யவிரு
கைப்புறத்தி லேந்திக் கனகமுலை தந்தாளை
யெப்பிறப்பிற் காண் பேனினி.

மாதா வுடல்சலித்தாள் வல்வினையேன் கால்சலித்தேன்
வேதாவுங் கைசலித்து விட்டானே — நாதா
விருப்பையூர் வாழ்சிவனே யின்னமோ ரன்னை
கருப்பையூர் வாராமற் கா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்

---

# நன்றி நவிலல்

எதிர்பாராத வேளையில் எங்கள் அன்புத்தெய்வம் காலமானதால் நாம் பெருங்கவலையும் தடுமாற்றமும் அடைந்தோம். சோகமுற்ற நிலையில் நாம் இருந்தவேளை திரளாகச் சமூகந்தந்து பலவகையிலும் உதவிகள் செய்து, எங்களைத் தேற்றியதோடு மரணக் கிரியைகளைக் குறைவின்றி நடத்திய உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி கூறுகின்றோம்.

தூரஇடங்களிலிருந்து மழை வெள்ளத்தையும் தாண்டிச் சிரமப்பட்டு வந்து எங்கள் துக்கத்திற் பங்குகொண்டவர்களுக்கும், மாயானம்வரை வந்து உதவியவர்களுக்கும் நன்றி கூறுகின்றோம்.

இன்றைய வீட்டுக்கிருத்தியம் கூட்டுவழிபாடுளிற் கலந்து, உணவருந்திச் சிறப்பித்தவர்களுக்கும் நன்றி கூறுகின்றோம்.

அராலி
*1994-01-13*

கணவன், மக்கள்
உறவினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜா அச்சகம், பண்ணாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org